**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2013–2014 ஆம் ஆண்டிற்கு 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான 25 இல்லங்களுக்கு திட்டத் தொடராணையும் நிதி ஒப்பளிப்பும் செய்து அரசாணை வெளியிடப்பட்டது–அரசாணையில் திருத்தம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.19

நாள்:28–03–2014
விஜய, பங்குனி 14,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.14, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 13–03–2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், கடிதம் ந.க.எண்.3605/ மா.தி.ந.2.1/2013, நாள் 26.03.2014.

-------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான 25 இல்லங்களுக்கு 2013–14 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் உணவூட்டு மானியம் ரூ.650/– ஆக உயர்த்தியும் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதத்தில், கன்னியாகுமரி மாவட்டம் அனுக்கிரகா தொண்டு நிறுவனம் மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான 10 இல்லங்களில் ஒன்றாகும். எனவே, மேற்கண்ட அரசாணையில் இணைப்பு–IIல் 10 இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு விவரம் என்பது 9 இல்லங்கள் என மாற்றம் செய்யப்பட்டு, ஒரு இல்லத்திற்கு ரூ.9,66,800/– வீதம் 9 இல்லங்களுக்கு ரூ. 87,01,200/– என மொத்த தொகையும் மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும், மேலும், இணைப்பு–1ல் 2013–2014ம் நிதியாண்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய ஏழு இல்லங்கள் என்பது தவறுதலாக மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய ஆறு இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு என ஆணை வெளியிடப்பட்டுள்ளதை மாற்றி ஏழு இல்லங்கள் என திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும், அதனுடன், ஏழு இல்லங்கள் என மாற்றம் செய்யப்படுவதால் ஒரு இல்லத்திற்கான செலவினம் ரூ.9,86,800/– என்ற அடிப்படையில் ஏழு இல்லங்களுக்கு ரூ.69,07,600/– என நிதி ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும் எனவும்,

இதனடிப்படையில், அரசாணையில் மொத்தம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ.2,42,90,000/–க்குப் பதிலாக ரூ.2,43,10,000/– என தொகையில் திருத்தம் செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் சூழ்நிலையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஏற்று, மேலே ஒன்றில் காணும் அரசாணைக்கு பின்வருமாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

<u>**திருத்தம்**</u>

மேலே ஒன்றில் காணும் அரசாணையில் பத்தி 3 மற்றும் 6க்கு பதிலாக பின்வருமாறு திருத்தி வாசிக்கப்பட வேண்டும்.

3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கென ஏற்கனவே செயல்பட்டு வரும் 7 இல்லங்களுடன் 14 வயதிற்கு மேற்பட்ட தொழிற்பயிற்சியுடன் கூடிய ஆண்களுக்கான 10 இல்லங்களும் மற்றும் பெண்களுக்கான தனியாக தொழிற்பயிற்சியுடன் கூடிய 10 இல்லங்களும் என மொத்தம் 27 இல்லங்களில் திண்டுக்கல் மாவட்டம் இனிய உதயம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் அனுகிரகா ஆகிய இரண்டு தொண்டு நிறுவனங்கள் நீங்கலாக மீதமுள்ள 25 தொண்டு நிறுவனங்களை, 2013–14 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்த, இவ்வாணையின் இணைப்பு I முதல் III ல் கண்டுள்ளவாறு, ஏழு மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களுக்கான செலவினத் தொகை ரூ.69,07,600/– மற்றும் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான 9 இல்லங்கள் மற்றும் பெண்களுக்கான தனியாக தொழிற்பயிற்சியுடன் கூடிய 9 இல்லங்கள், என 18 இல்லங்களுக்கு செலவினத் தொகையாக ரூ.1,74,02,400/– என மொத்தம் ரூ.2,43,10,000/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து பத்தாயிரம் மட்டும் ) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இவ்வில்லங்களில் தங்கி உள்ளோருக்கு வழங்கப்படும் உணவூட்டு மானியத்தை ரூ.450/–லிருந்து ரூ.650/– ஆக உயர்த்தி வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.2,43,10,000/–ல் உணவூட்டு மானியம் உயர்த்துவதால் ஏற்படும் செலவினம் ரூ.24,00,000/– மட்டும் ஒரு ''புது துணைப்பணி'' குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்பார்த்து, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற்று செலவிடப்பட வேண்டும். இதற்கான ஆணைகள் நிதி(வரவு செலவு பொது 1) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணத்தைப் பெற தேவையான விண்ணப்பத்தை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணை நகலுடன் நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை சட்டப் பேரவையின் சிறப்பு கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு 2014–15 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை உரிய தருணத்தில் தக்க விளக்கக் குறிப்புடன்

நிதி(வ.வெ.பொ.1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேற்காணும் திருத்தம், நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா. எண்.18126/நிதி(சந)/2014, நாள் 28.03.2014 படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**<u>நகல்:–</u>**

நிதி (சந/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>**இணைப்பு—I**</u>

**(அரசாணை (நிலை) எண்.19, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 28—03—2014)**

**2013— 14ஆம் நிதியாண்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய ஏழு இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு விவரம்.**

**தொடர் செலவினம்** **தொகை ரூ.**

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் / கணினி இயக்குபவர் மதிப்பூதியம்<br>ரூ.6,000/— x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.72,000/— |
| 2. | காப்பாளர்<br>ரூ.5,000/— x 1 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.60,000/— |
| 3. | சமையலர்<br>ரூ.3,000/— x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.36,000/— |
| 4. | உதவி சமையலர்<br>ரூ.2,000/— x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/— |
| 5. | இரவுக் காவலர்<br>ரூ.4,000/— x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.48,000/— |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள்<br>ரூ.6,000/— x 2 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.1,44,000/— |
| 7. | துப்புரவு பணியாளர்<br>ரூ.2,000/— x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/— |
| 8. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.650/— ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.3,12,000/— |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்)<br>ரூ.500/— x 40 நபர்கள் x 2 செட் | ரூ.40,000/— |
| 10. | வாடகை / கட்டிட பராமரிப்பு (சொந்த கட்டிடம் எனில்) மற்றும் மின் கட்டணம்<br>ரூ.13,000/— x 12 மாதங்கள் | ரூ.1,56,000/— |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம்<br>ரூ.1,000/— x 12 மாதங்கள் | ரூ.12,000/— |
| 12. | மருந்துகள் ரூ.1,500/— x 12 மாதங்கள் | ரூ.18,000/— |
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள்<br>ரூ.200/— x 40நபர்கள் | ரூ.8,000/— |
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள்<br>ரூ.50/— x 40 நபர்கள் | ரூ.2,000/— |
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/— x 12 மாதங்கள் | ரூ.10,800/— |

| | | |
|---|---|---|
| **16.** | தோட்டக்கலை / மெழுகுவர்த்தி/பேக்கரி பயிற்சி | 20,000/– |
| | **மொத்தம்** | **ரூ.9,86,800/–** |

| | | |
|---|---|---|
| **1.** | ஒரு இல்லத்திற்கான செலவினம் | **ரூ.9,86,800/–** |
| **2.** | ஏழு இல்லங்களுக்கான செலவினம்<br>**(ரூ.9.,86,800/–** x 7 **)** | **ரூ.69,07,600/–** |

(ரூபாய் அறுபத்து ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து அறுநூறு மட்டும்)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–II

(அரசாணை (நிலை) எண்.19, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள்28–03–2014)

14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய ஆண்களுக்கான 9 இல்லங்களுக்கென செலவின ஒப்பளிப்பு விவரம்

| | |
|---|---|
| வயது வரம்பு | 14 வயது மற்றும் அதற்கு மேல் |
| இனம் | ஆண்கள் |

**தொடர் செலவினம்** **தொகை ரூ.**

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் / கணினி இயக்குபவர் மதிப்பூதியம்<br>ரூ.6,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.72,000/– |
| 2. | காப்பாளர்<br>ரூ.5,000/– x 1 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.60,000/– |
| 3. | சமையலர்<br>ரூ.3,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.36,000/– |
| 4. | உதவி சமையலர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 5. | இரவுக் காவலர்<br>ரூ.4,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.48,000/– |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள்<br>ரூ.6,000/– x 2 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.1,44,000/– |
| 7. | துப்புரவு பணியாளர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 8. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.650/– ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.3,12,000/– |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்)<br>ரூ.500/– x 40 நபர்கள் x 2 செட் | ரூ.40,000/– |
| 10. | வாடகை / கட்டிட பராமரிப்பு (சொந்த கட்டிடம் எனில்) மற்றும் மின் கட்டணம்<br>ரூ.13,000/– x 12 மாதங்கள் | ரூ.1,56,000/– |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம்<br>ரூ.1,000/– x 12 மாதங்கள் | ரூ.12,000/– |
| 12. | மருந்துகள் ரூ.1,500/– x 12 மாதங்கள் | ரூ.18,000/– |
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள்<br>ரூ.200/– x 40நபர்கள் | ரூ.8,000/– |

| | | |
|---|---|---|
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள்<br>ரூ.50/– x 40 நபர்கள் | ரூ.2,000/– |
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/– x 12 மாதங்கள் | ரூ.10,800/– |
| | **மொத்தம்** | **ரூ.9,66,800/–** |

| | | |
|---|---|---|
| 1. | ஒரு இல்லத்திற்கான செலவினம் | **ரூ.9,66,800/–** |
| 2. | ஒன்பது இல்லங்களுக்கான செலவினம்<br>(ரூ.9,66,800/– x 9) | **ரூ.87,01,200/–** |

(ரூபாய் எண்பத்து ஏழு இலட்சத்து ஆயிரத்து இருநூறு மட்டும்)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–III

(அரசாணை (நிலை) எண். 19, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 28–03–2014)

14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய பெண்களுக்கான 9 இல்லங்களுக்கென செலவின ஒப்பளிப்பு விவரம்.

| | |
|---|---|
| வயது வரம்பு | 14 வயது மற்றும் அதற்கு மேல் |
| இனம் | பெண்கள் |

**தொடர் செலவினம்** **தொகை ரூ.**

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் / கணினி இயக்குபவர் மதிப்பூதியம்<br>ரூ.6,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.72,000/– |
| 2. | காப்பாளர்<br>ரூ.5,000/– x 1 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.60,000/– |
| 3. | சமையலர்<br>ரூ.3,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.36,000/– |
| 4. | உதவி சமையலர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 5. | இரவுக் காவலர்<br>ரூ.4,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.48,000/– |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள்<br>ரூ.6,000/– x 2 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.1,44,000/– |
| 7. | துப்புரவு பணியாளர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 8. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.650/– ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.3,12,000/– |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்)<br>ரூ.500/– x 40 நபர்கள் x 2 செட் | ரூ.40,000/– |
| 10. | வாடகை / கட்டிட பராமரிப்பு (சொந்த கட்டிடம் எனில்) மற்றும் மின் கட்டணம்<br>ரூ.13,000/– x 12 மாதங்கள் | ரூ.1,56,000/– |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம்<br>ரூ.1,000/– x 12 மாதங்கள் | ரூ.12,000/– |
| 12. | மருந்துகள் ரூ.1,500/– x 12 மாதங்கள் | ரூ.18,000/– |
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள்<br>ரூ.200/– x 40நபர்கள் | ரூ.8,000/– |

| | | |
|---|---|---|
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள்<br>ரூ.50/– x 40 நபர்கள் | ரூ.2,000/– |
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/– x 12 மாதங்கள் | ரூ.10,800/– |
| | **மொத்தம்** | **ரூ.9,66,800/–** |

| | | |
|---|---|---|
| 1. | ஒரு இல்லத்திற்கான செலவினம் | **ரூ.9,66,800/–** |
| 2. | ஒன்பது இல்லங்களுக்கான செலவினம்<br>(ரூ.9,66,800/– x 9) | **ரூ.87,01,200/–** |

(ரூபாய் எண்பத்து ஏழு இலட்சத்து ஆயிரத்து இருநூறு மட்டும்)

**சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | 7 மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு. | ரூ.69,07,600/– |
| 2. | மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான ஒன்பது இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு. | ரூ.87,01,200/– |
| 3. | மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான ஒன்பது இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு. | ரூ.87,01,200/– |
| | **மொத்தம்** | **ரூ.2,43,10,000/–** |

(ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து பத்தாயிரம் மட்டும்.)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.